1992 செப்டம்பர் 21]

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் கூறியதுபோல் மீன்பிடித் துறைமுகம் இருப்பது போன்று எனக்கு ஒன்றும் தெரியவில்லை. ஆரம்பத்தில் சிறிய துறைமுகமாக இருந்தாலும், அது மண்மூடிக் கிடக்கின்றது. ஆகவே அரசு அந்த மண்மூடிக் கிடக்கின்ற துறைமுகத்தை, தூர்வாரி சிறந்த முறையில் அமைத்துத் தருமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியுதவி கிடைக்கப் பெற்றவுடன் பணிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 20, திரு. டி. சுதர்சனம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

20—

பாலிதீன் பைகள் செய்யும் கூட்டுறவுச் சங்கங்கள்.

*9519—திரு. டி. சுதர்சனம் :

மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பாலிதீன் பைகள் செய்யும் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை உள்ளன ?

(ஆ) அவைகள் லாபத்தில் இயங்குகின்றனவா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ): தமிழ்நாட்டில் 16 பாலிதீன் பைகள் செய்யும் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் ஒரு சங்கம் நீங்கலாக, 15 சங்கங்கள் லாபத்தில் இயங்கி வருகின்றன. 1991–92 ஆம் ஆண்டு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்பு, அதிகப்படியான லாபங்களை அந்த 15 சங்கங்கள் ஈட்டியுள்ளன. ரூ. 26.53 லட்சம் லாபத்தை அந்தச்சங்கங்கள் ஈட்டியுள்ளன.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நஷ்டத்திலே இயங்குகிற அந்த ஒரு சங்கத்தையும் லாபத்திலே இயங்க வைப்பதற்கு அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, நஷ்டத்திலே இயங்கிவருகிற அந்த பொன்னி மகளிர் பாலிதீன் கூட்டுறவுச் சங்கத்தில் நவீன இயந்திரங்கள் நிறுவப்பட்டு, லாபத்தில் இயங்குவதற்காக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும் அரசு சார்பு நிறுவனங்கள் அரசுத் துறைப் கம்பெனிகள், தமிழ்நாடு கதர் வாரியம் ஆகியவை பொருட்களைப் பாதுகாக்க தினசரி உபயோகத்திற்கு பாலிதீன் பைகளை உபயோகிக்கிறார்கள். அந்த நிறுவனங்கள், இந்த கூட்டுறவுச் சங்கங்களில்தான் வாங்க வேண்டுமென்ற ஒரு நிபந்தனையை அரசு வைக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1— (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

தகட்டூர் பத்திரப்பதிவு அலுவலகத்திற்குக் கட்டிடம்.

வினா எண். 5442— திரு. பி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வேதாரணியம் தொகுதி தகட்டூரில் இயங்கிவரும் பத்திரப் பதிவு அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்ட நிலம் கையகப்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: நாகப்பட்டினம் பதிவு மாவட்டத்திலுள்ள தகட்டூர்சார் பதிவகத்துக்கு கட்டிடம் கட்ட அரசு புறம்போக்கு நிலம் இருப்பின் அதனை கையகப்படுத்த வட்டாட்சியருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள மாவட்டப் பதிவாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.